இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 11-01-2025

# பெரியாரைப் பற்றிப் பேச உனக்கு என்ன அருகதை?

**95 வயது வரை மூத்திரச் சட்டியைத் தூக்கிக் கொண்டு தமிழ்ச் சமுதாயத்தின் விடியலுக்காக உழைத்த பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரைப் பற்றிப் பேச இந்தக் கழிசடைக்கு அருகதை இருக்கிறதா?**

**தன்னைத் தானே மோகித்து - சதா சோற்றைப் பற்றியே சிந்தித்து - அடுத்தவரை மிரட்டியே பணம் திரட்டி - வாயை அடகு வைப்பதையே பிழைப்பாகக் கொண்டு வாழும் புதுப் பிராணி ஒன்றைப் பிடித்து பெரியாரைக் கொச்சைப்படுத்திப் பேச கூலி கொடுத்துக் கொண்டிருக்கிறது ஆரியக் கூட்டம். அவனுக்கு வெட்கமும் கிடையாது. மானமும் கிடையாது. சூடும் கிடையாது. சொரணையும் கிடையாது. எவன் கொடுத்தாலும் எதிர் வீட்டைப் பார்த்துக் குரைப்பான். எவன் ஏவி விட்டாலும் எதிரே நிற்பவனைப் பார்த்து கனைப்பான்.**

**உழைக்காமல் உண்டி பெருக்குவதற்கு எது எப்போது பயன்படுமோ, அதை அப்போது பயன்படுத்திக் கொள்பவன் அவன்.**

செத்து மடியும் ஈழத்தமிழன் வீட்டில் இருந்தே சொத்து பறித்து வாழ்ந்தவன். இழவு வீட்டில் காசுக்கு ஒப்பாரி வைக்கப் போன ஒருத்தி, ‘பந்தலிலே பாவக்காய்’ பாடிய பாட்டை தமிழ்நாடு அறியும். ‘பந்தலிலே பாவக்காய்... பந்தலிலே பாவக்காய்’ என்று ஒருத்தி ஒப்பாரி வைக்க, ‘போகையிலே பார்த்துக்கலாம்.. போகையிலே பார்த்துக்கலாம்’ என்று இன்னொருத்தி பாடியதாக ஒரு பாட்டு உண்டு. இழவு வீட்டில் பாகற்காய் பறித்த பாவி அவன்தான்.

ஐயோ பாவம்! இவன் பேச்சை உண்மை என நம்பி அந்த மக்கள் பணம் அனுப்பி பிழைக்க வைத்தார்கள். அவர்களது உழைப்பைச் சூறையாடி உண்டு கொழுத்தான். நாள்பட நாள்பட அவர்களுக்கும் இது ‘விஷஜந்து’ என்று தெரிந்து போனதால் ‘டாலர்’ அனுப்புவதை நிறுத்தினார்கள். இவனுக்கு டல்லடித்தது பிழைப்பு.

ஈழத்தமிழரை ஆதரித்துப் பிழைப்பது முடிவுக்கு வந்ததும் ஈனப்பிழைப்பு ஐடியா ஒன்று கிடைத்தது. திராவிட இயக்கத்தை, திராவிடத்தை, தந்தை பெரியாரை, திராவிட இயக்கத் தலைவர்களை திட்டிப் பிழைக்க இங்கே சிலரால் தட்சணை தரப்படுகிறது என்ற தகவல் கிடைத்தது, அந்தப் பக்கம் போனான்.

**‘திராவிடத்தைத் திட்ட நாக்கு வாடகைக்கு விடப்படும்’ என்பதுதான் அவனது கட்சிக் கொள்கை. இப்படி ஒருவனுக்காகத் தானே அந்தக் கும்பல் காத்துக் கிடக்கிறது. உடனே ‘மார்வாடி’ மூலமாக காசுகளை அனுப்புகிறது. ‘கத்து, காசு’. இதுதான் உத்தரவு. கத்தக் கத்தக் காசு. ‘இன்னும் இன்னும்’ என்று கத்தச் சொல்கிறார்கள். சவுண்ட்டுக்குத் தக்க அளவில் அமௌண்ட்!**

**‘..ச்சீ!’ - இப்படி ஒரு பிழைப்பை இந்த யுகத்தில் எவனும் பிழைக்கவில்லை!**

**ஒரு விஜயலட்சுமிதான் வெளியில் வந்துள்ளார். அவர் இவனுக்குச் சொல்லும் அடைமொழியை இங்கே நாம் பயன்படுத்த முடியாது. ஆனால் அவனுக்கு அதைப் பற்றிக் கவலையில்லை. உடம்பில் உடையில்லை என்பதை உணராதவன். சொரணை சிறிதும் இல்லாதவன். உமிழ்நீரைச் சிறுநீராய் கழிக்கும் கழிசடையவன்.**

‘மானமுள்ள ஆயிரம் பேருடன் போராடலாம், மானத்தைப் பற்றிக் கவலைப்படாத ஒரே ஒருவனுடன் போராட முடியாது’ என்றார் தந்தை பெரியார். அது இவன்தான். மானம் இருந்திருந்தால் விஜயலட்சுமியின் ஒரு வீடியோவுக்கே தலைமறைவு ஆகி இருப்பானே! ஆயிரம் வீடியோக்களில் ஒரு லட்சம் வசைச்சொற்களைக் கேட்ட பிறகும் ஒருவனால் எப்படி மீடியாக்களுக்கு முன்னால் பேட்டி தர உட்கார முடிகிறது.

**சொந்தப் பணத்தைக் கட்சிக்குக் கொடுத்து - இறந்த பிறகும் இயக்கப் பிரச்சாரத்துக்குப் பயன்படுத்த வகை செய்துவிட்டுப் போன ஒரு தலைவனை - ஊரார் பணத்தில் உண்டு கொழுத்து - மிரட்டிப் பறித்து குடும்பம் நடத்தும் நீ பேச அருகதை இருக்கிறதா?**

தமிழ் நிலத்தில் எத்தனையோ போராளிகளை உருவாக்கியவர் தந்தை பெரியார். முப்பது ஆண்டுகள் ஒரு போராளி அமைப்பை நடத்திய பிரபாகரனையே ‘ஹோட்டல் ஓனர்’ போல உருவகப்படுத்தி விட்டவன் நீ!

**‘தமிழ்நாடு தமிழருக்கே’ என முழக்கமிட்டவர் பெரியார். இந்திக்கு எதிராக 1938 முதல் போராடத் தொடங்கியவர் பெரியார். ‘தமிழா; தலைநிமிர்!’ என்று இயக்கம் நடத்தியவர் பெரியார். இராமாயணம் கோலோச்சிய காலத்தில் திருக்குறளை அந்த இடத்தில் கொண்டு வந்து வைத்தவர் பெரியார். தமிழ்நிலம் காத்தவர் பெரியார். ‘தமிழ்நாடு என்று பெயர் சூட்டாமல் நான் ஏன் வாழவேண்டும்’ என்றவர் பெரியார்.**

ஒடுக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் கல்வி, வேலை வாய்ப்பில் இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று 1919 முதல் தீர்மானங்கள் கொண்டு வந்தவர் பெரியார். அதற்காகவே இயக்கங்கள் கண்டவர் பெரியார். அவரது போராட்டத்தால் தான் இந்திய அரசியலமைப்புச் சட்டமே முதல் திருத்தம் கண்டது. அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆக கோவில் நுழைவுப் போராட்டம் தொடங்கியவர் பெரியார். அதைச் சட்டமாக்கியவர் தமிழினத் தலைவர் கலைஞர்.

இப்படி ஒரு சாதனையை உன் வாழ்க்கையில் இருந்து சொல். அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பதிய ‘க்ரைம்’ நம்பர் வேண்டுமானால் இப்படி அடுக்கலாம். மானங்கெட்டவன்.

**‘மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு’ என்று சொன்னது பெரியாரின் பொன்மொழி!**

**‘மாமா, கெட்டவன் இல்லை. கேடு கெட்டவன்’ என்பது உனது பொன்மொழி!**

நீ பேசு. அது உனக்குத் தரப்படும் கூலிக்கு நீ செய்யும் பிழைப்பு. இதுமாதிரி நடந்த எத்தனையோ விபூதி வீரமுத்துகள் மண்ணுக்குள் புதைந்துவிட்டார்கள். பெரியார்தான் மண்ணைப் பிளந்து எழுந்து சிலையாக, மலையாக நிற்கிறார்.

அவர் மீது செருப்பு வீசிய இடத்தில் இன்று சிலை இருக்கிறது. ஆனால் நீ நடந்த தடத்தில் ஒரு புல் கூட முளைக்காது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (10.1.2025) முகாம் அலுவலகத்தில், முன்னாள் இந்திய குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு அவர்களின் மகள் திருமதி தீபா குடும்பத்தினருடன் சந்தித்து, தனது மகன் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.

## ‘சிந்துவெளி நாகரிகம்தான் திராவிடர் நாகரிகம்’ என

# நிரூபித்தவர்கள் வரலாற்று ஆசிரியர்கள் என்றால் - அதை நிலைநாட்டியவர் தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின்!

## சட்டப் பேரவையில் அவை முன்னவர் அமைச்சர் துரைமுருகன் பெருமிதம்!

**சென்னை, ஜன.11–**

**சிந்துவெளி நாகரிகம் திராவிடர்களின் நாகரிகம் என்று நிரூபித்தவர்கள் மார்ஷல் மற்றும் அர்னால்ட் டாயன்பீ போன்ற வரலாற்று ஆசிரியர்கள் என்றால் அதை நிலைநாட்டியவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்று சட்டப்பேரவையில் அவை முன்னவர் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பெருமிதம் பொங்கக் குறிப்பிட்டார்.**

அவை முன்னவர் - நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசியதாவது:-

ஒரு மகிழ்ச்சியை என்னுடைய உள்ளத்தில் ஏற்பட்டதை இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். பொதுவாக சிந்துவெளி நாகரிகத்தைப் பற்றி நாம் எல்லோரும் SSLC வரையிலே படித்தாலும் சரி, B.A. வரையிலும் படித்தாலும் சரி பாடப்புத்தகத்திலே ஒரு 2, 3 பகுதிகள் எழுதப்பட்டிருக்கும். அது மாணவனுக்கு சிந்துவெளி பற்றி ஒரு குறிப்பு எழுதுக என்று சொல்லுவார்கள். பத்து வரிக்கும் மிகாமல் எழுதுங்கள் என்று, அதோடு முடிந்துவிட்டது நாகரிகத்தின் வரலாறு.

ஆனால், சிந்துவெளி நாகரிகம் இருந்த ஒன்றுதான், நாம் இந்த நாட்டிற்கு சொந்தக்காரர்கள் என்பதை நிரூபிக்கின்ற ஆதாரம். கீழடி கிடைக்கிற வரையில் சிந்துவெளி நாகரிகம்தான் தலைசிறந்த நாகரிகம். அந்த நாகரிகம், திராவிடர் நாகரிகம்; தமிழர் நாகரிகம் என்று இருந்தது. Marshall அவர்கள்தான் அதை முதலில் கண்டுபிடித்தவர். வேறு எங்கேயோ படித்துவிட்டு வந்து அவருடைய செலவிலேயே ஆட்களை வைத்து குழி தோண்டியதையெல்லாம் பார்க்கிறபோது படாத பாடுபட்டிருக்கிறார். அவருடைய நூலைப் படித்தால் கண்களில் தண்ணீர் வந்துவிடும். எங்கேயோ இருப்பவர் இந்த நாட்டிற்கு நாகரிகத்தை கண்டுபிடிக்க வந்தவர். அதற்குப் பிறகு ஈராஸ் பாதிரியார் அவர்களோடு சேர்ந்து இந்த நாகரிகத்தின் பெருமையை வெளிக்காட்டினார்கள்.

ஆனால், குடத்துக்குள் இடப்பட்டதைப்போல, பள்ளி மாணவர்களோடு இருந்த அந்தச் செய்தி, வரலாறு இன்றைக்கு சட்டமன்றத்தில் பல நேரங்களிலே பேசப்படுவதாக, பல்வேறு அரங்கங்களிலே கருத்து தெரிவிப்பதாக, பொதுமக்கள் மத்தியிலே சிந்துவெளி நாகரிகம் பற்றி வந்திருப்பது குறித்து நான் மகா மகிழ்ச்சியடைகிறேன். காரணம், Arnold Toynbee என்பவர் உலகத்திலே பெரிய வரலாற்று ஆசிரியர். அவர், ‘வரலாற்றை மறந்த மனிதன் நினைவிழந்த மனிதனுக்கு சமம்’ என்று சொன்னார்.

நாம் அதைப் பற்றி தெரியாத வரையில், இன்றைய வரையில் கூட பைத்தியக்காரனாகத்தான் இருக்கிறோம். ஆனால், அந்த வரலாற்றுக்கு புத்துயிர் கொடுத்து, இன்றைக்கு அதற்கொரு புதுமை உணர்ச்சியை தந்திருக்கிறவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்பதிலே எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

Marshallக்கும், ஈராஸ் பாதிரியாருக்கும் என்ன பெருமை இருக்கிறதோ, வருங்காலத்தில் இதை மாற்ற வேண்டுமென்று நினைக்கிறவர்களோடு எதிர் போராட்டம் நடத்துகிறோம்.

ஆனால், சிந்துவெளி நாகரிகம் திராவிடர்களுடைய நாகரிகம் என்பதை நிரூபித்தவர்கள் அவர்கள்.



அதை நிலைநாட்டியவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் என்ற பெருமை பின்னாலே வரும். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் மட்டுமல்ல, இதில் எல்லோரும் ஈடுபட்டிருக்கிற காரணத்தால், எல்லோருக்கும் இது பொதுவான பெருமைக்குரியதுதான் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு முறையும் அதைப் பற்றியெல்லாம் இன்னும் நிறைய பேசலாம். நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இப்போது புது history எழுதச் சொல்லிவிட்டார்கள். புது historyல் 19 பேர் போட்டார்கள். 19 பேரும் அவர்கள்தான். 18 பேரையும் அவர்களைத்தான் போட்டார்கள். ஒருத்தர் கிடைக்கவில்லை. அதற்கான வேறு ஆள், கனடா நாட்டில் பிராமண சங்கத் தலைவராக ஒருவர் இருந்தார். கனடாவிலிருந்து அவரைக் கொண்டுவந்து, இந்தக் குழுவில் போட்டார்கள். ஆக, மொத்தம் 19 பேரும் இவர்கள்தான். அதனால்தான் சிந்துவெளி நாகரிகம், இந்து நாகரிகம், சரஸ்வதி நாகரிகம், இலட்சுமி நாகரிகம் என்று கொண்டு வருகிறார்கள்.

அதை ஆரம்பத்திலேயே நறுக்கி, இல்லை, இது அவ்வளவுதான் என்று நிலைநாட்டுவதற்கு அரசும், மக்களும் ஒன்றாக இருப்பதைப் பார்க்கிறபோது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. நான் வரலாற்றைப் படித்த மாணவன் அல்ல. நான் Economics படித்த மாணவன்.

ஆனால், வரலாற்றிலே interest உடையவன். இதே அவையிலே நான் உட்கார்ந்து கொண்டிருந்தபோது, ஒருநாள் புத்தகங்களை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தேன். எதிரிலே இருந்த அம்மையார் அவர்கள் முதலமைச்சர் என்ன புத்தகம் என்று கேட்டார்கள். History book என்று நான் சொன்னேன். “Are you a student of history?” என்று கேட்டார்கள். “No, I am a student of Economics” என்றேன். “Then, how come you are reading these?” என்றார்கள். “Out of my interest, I am doing this” என்றேன். “What book is that?” என்றார்கள். “Gutenberg” என்றேன். “Gutenberg? Too hard to study” என்றார்கள். அதற்குப் பிறகு paper news பார்த்தீர்களா என்று கேட்டார்கள். ஆகையினால், வரலாறு என்பது உணர்வுள்ள மனிதர்களுக்கெல்லாம் இருக்கப்பட வேண்டிய ஒன்று. அது வந்திருக்கிறது என்பதை நினைத்து முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டையும், இந்த அவையிலே பேசிய அத்தனைபேருக்கும் என்னுடைய வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் உரையாற்றினார்.

## அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிராகச் செயல்படும் ஆர்.என்.ரவியை

# ஆளுநர் பதவியிலிருந்து நீக்கக்கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்கு!

சென்னை, ஜன. 11 –

ஆளுநர் ஆர்.என்.ரவியை பதவியிலிருந்து நீக்கக்கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்குத்தொடரப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஆளுநரின் செயல்பாடு அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிராக உள்ளதாகவும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு எதிரான நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறார். தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்து வரும் ஆர்.என்.ரவியை பதவியிலிருந்து நீக்கக்கோரி தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில், ஆளுநர் ஆர்.என்.ரவியை பதவியிலிருந்து நீக்கக்கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

உச்சநீதிமன்ற வழக்கறிஞர் ஜெயசுகின் என்பவர் தாக்கல் செய்த இந்த மனுவில், தமிழ்நாடு ஆளுநரின் செயல்பாடு அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிராக உள்ளதாக கூறப்பட்டுள்ளது. மேலும், ஆளுநர் ஆர்.என்.ரவி. விளம்பரம் தேடும் நோக்கிலேயே செயல்பட்டு வருவதாகவும், அரசியல் சாசனத்தை மீறி அவர் நடந்து வருவதாகவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அரசை அவமதிக்கும் வகையில் ஆளுநர் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறார் என்றும் தமிழ்நாடு அரசு தயாரித்துக் கொடுக்கும் ஆளுநர் உரையில் பல பகுதிகளைப் படிக்க மறுப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டு ஆளுநர் உரையில் இடம் பெற்றிருந்த திராவிட மாடல், சட்டம் ஒழுங்கு சிறப்பாக உள்ளது போன்ற வார்த்தைகளை படிக்க மறுத்துள்ளார்.

இந்த ஆண்டு ஆளுநர் உரையை படிக்காமலேயே சட்டப் பேரவையில் இருந்து வெளியேறி உள்ளார் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு வெளியேறியது என்பது சட்டப்பேரவையை அவமதிப்பதாகும், ஜனநாயக செயல்பாட்டுக்கு எதிரானதாகும் என்றும் ஆளுநர் அரசியலுக்கு அப்பாற்பட்டவராக இருக்க வேண்டும். ஆனால் ஆளுநர் அவ்வாறு செயல்படவில்லை என்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எனவே, ஆளுநர் ஆர்.என்.ரவியை நீக்க ஒன்றிய அரசுக்கும், குடியரசுத் தலைவருக்கும் உத்தரவிட வேண்டும் என்று மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்த மனு உச்சநீதிமன்றத்தில் விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.